[2022 மார்ச் 21

அனைத்துப் பகுதிகளிலும், புதிதாக பகுதிநேர நியாய விலைக் கடைகளையும், பேரூராட்சிகளில் நியாய விலைக் கடைகளையும் பிரித்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல், மக்களுக்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. அதைத்தான் ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். நிதி நெருக்கடி இருந்தாலும், உறுப்பினர்கள் நீங்கள் சொல்லியிருக்கிற பகுதியில் தேவைப்படுகின்ற கடைகளைத் திறப்பதற்கு கோரிக்கை வருகின்றபட்சத்தில், கிராமங்களில் 500 அட்டைகள் வரை இருந்தால், முழுநேர நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம், அதே சமயத்தில் சுமார் 150 குடும்ப அட்டைகள் இருந்தால், பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருகின்றபட்சத்தில், நிச்சயமாக அந்தப் பகுதியில் கடைகள் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

25—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***7530—திரு. சீ. கதிரவன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர் தொகுதி, ச. கண்ணனூர் பேரூராட்சியில் மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மார்ச் 21]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மண்ணச்சநல்லூர் தொகுதி அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், 2 அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 29 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள், அத்தொகுதி மாணவியரின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மண்ணச்சநல்லூர் தொகுதி, ச. கண்ணனூர் பேரூராட்சியில் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள்.*

திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கையால் உயர் கல்வியில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக நமது தமிழகம் திகழ்கிறது. தமிழகத்தில் தற்போது உயர் கல்வி பயிலும் மாணவர்கள் 51 சதவீதத்திற்குமேல் உள்ளனர். மேலும், இந்த எண்ணிக்கையை உயர்த்தும்வகையில், இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட திட்டம்தான் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டமாகும். இந்தக் கூட்டத் தொடரின் ஆட்டநாயகனாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புகழ் இத்திட்டத்தினால் பட்டிதொட்டி எங்கும் பாராட்டப்பட்டும், பேசப்பட்டும் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணச்சநல்லூர் தொகுதியில் ஆண்டுதோறும் தோராயமாக 3,500 மாணவ, மாணவியர் தேர்ச்சி அடைகின்றனர். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணப்படி சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் வகையில், மகளிருக்கென்று எனது மண்ணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட, ச. கண்ணனூர்*

பேரூராட்சியில் அரசு மகளிர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை உருவாக்கித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு மேலும் ஒரு வேண்டுகோள். எனது மண்ணச்சநல்லூர் தொகுதிக்குட்பட்ட மூவனூர் ஊராட்சியில் இந்த ஆண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த 10 மாத காலத்திலே உயர் கல்வித் துறையில் செய்திருக்கிற பல்வேறு நலத் திட்டங்களை மக்கள் நன்கு அறிவார்கள். அரசின் சார்பாக 10 கலைக் கல்லூரிகளும், அறநிலையத் துறையின் சார்பாக 10 கலைக் கல்லூரிகளும், கூட்டுறவுத் துறையின் சார்பாக ஒரு கலைக் கல்லூரியும் நீங்கள் கேட்டிருப்பதால் உங்களுக்கும் ஒன்று ஆக, 21 கலைக் கல்லூரிகளைத் திறக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அவையெல்லாம் வருகிற கல்வியாண்டிலிருந்து துவங்கப்படவிருக்கின்றன. அறநிலையத் துறையின் சார்பாக 4 கலைக் கல்லூரிகள் இந்த ஆண்டே துவங்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள கலைக் கல்லூரிகள் அடுத்த கல்வியாண்டிலிருந்து துவங்கப்படவிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மகளிர் கல்விக்காக உலகிலேயே மிகப் பெரிய திட்டத்தை அறிவித்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பள்ளிகளிலே படித்த மாணவிகள் உயர் கல்வி பயில மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அது அரசு கலைக் கல்லூரிகளில் பயிலும் மாணவிகளுக்கு மட்டுமல்லாமல், தொழிற்கல்வி பயிலும் மாணவிகளாக இருந்தாலும், Polytechnic கல்லூரியில் பயிலும் மாணவிகளாக இருந்தாலும் அவர்களுக்கும் வழங்கப்படும்.

2022 மார்ச் 21]

நேற்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த பேட்டியில்கூட சொல்லியிருக்கிறார். "எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் அந்த மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்" என்று அறிவித்திருப்பவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அதே மாவட்டத்தில் அரசுக் கல்லூரிகளில் உள்ள மொத்த இடங்கள் 960. மொத்தம் உள்ள 960 இடங்களில் பெண்களுக்கென்று 48 இடங்கள்தான் fill up ஆகியிருக்கின்றன. மீதி இடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேற்று அறிவித்திருக்கிறார்கள். அரசு கலைக் கல்லூரிகளில் பெண்கள் நிறைய பேர் படிக்கின்றார்கள். பல்கலைக்கழகத்திற்குச் செல்லும்போதெல்லாம் பல இடங்களில் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், Polytechnic கல்லூரியைப் பொறுத்தவரையில் பெண்கள் அவ்வளவாகச் சேர்வதில்லை. அதையெல்லாம் கருத்தில்கொண்டுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொழிற்கல்வியாக இருந்தாலும், எந்தக் கல்வியாக இருந்தாலும், உயர் கல்வி பயில்வதற்காக அவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த மாவட்டத்தில் மட்டும் அரசுக் கல்லூரிகளில் மொத்தம் 960 இடங்கள் இருக்கின்றன. அதில், 321 இடங்கள் காலியாக இருக்கின்றன. பெண்களுக்கான இடங்கள் 48 fill up ஆகியிருக்கின்றன. அதேபோல அரசு உதவிபெறும் பள்ளிகளில் 104 இடங்கள் காலியாக இருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகளில் 4,980 இடங்கள் காலியாக இருக்கின்றன. மொத்தம் 5,405 இடங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் வரும் ஆண்டுகளில் நிரப்பப்பட்டு விடும். ஏனென்றால், தலைவர் அவர்கள் அறிவித்திருக்கின்ற மகளிருக்காக ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்காக கல்லூரிகளில் சேர்கின்ற பெண்கள் அனைவரும் எங்களுக்கு அரசு கல்லூரிகள் வேண்டும், அரசு கல்லூரிகள் வேண்டும் என்றுதான் கேட்பார்கள். நிதிநிலைமைக்கேற்ப அவ்வப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2022 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள்.

திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

26—

சாலையை அகலப்படுத்துதல்

***7073—திரு. J.L. ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாப்பாக்கம் கூட்டு ரோடு முதல் சின்ன உப்புப்பேட்டை வரை உள்ள சாலையை அகலப்படுத்தி, இருவழிச் சாலையாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளாப்பாக்கம் சாலை 2.80 கிலோ மீட்டர் நீளமுடைய சாலை. ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், 2017–2018–ன்கீழ் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. விளாப்பாக்கம்–சின்ன உப்புப்பேட்டை சாலை 1.6 கிலோ மீட்டர் நீளமுடைய சாலை. கடந்த 2020–2021–ல் திட்டம் சாரா பணிகளின்கீழ் ஓடுதளம் பழுதுபார்க்கப்பட்டு, இப்போது அந்தச் சாலை நல்ல நிலையில் உள்ளது.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு முதலமைச்சருக்கு வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS